தமிழ் முரசு 5 11 2005 சனி

அதிர்ஷ்டத்தை உருவாக்க முடியும்!

காமராஜ்

அதிர்ஷ்டம் இருந்தால் மட்டுமே தொழில் அதிபராக முடியும் என்ற எண்ணம் இருந்தால் மாற்றிக்கொள்ளுங்கள்.

சரியான மனப் போக்கு, சரியான திறமை, நல்ல ஊழியர்கள் இருந்தால் அதிர்ஷ்டத்தை எல்லாரும் உருவாக்க முடியும்.

"ஜினோவேட்" நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஆண்டன் ரவீந்திரனின் கூற்று இது.

இவ்வாண்டின் சிறந்த தொழில்முதிபர்களாக இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 பேரில் ஆண்டன் ரவீந்திரனும் ஒருவர்.

"ஜினோவேட்" என்ற தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தை அவர், கடந்த 2000ம் ஆண்டு தொடங்கினார்.

ஆரம்பித்த ஆறே ஆண்டுகளில் ஒன்பது நாடுகளில் அதன் 12 கிளைகள் படர்ந்திருக்கிறது.

"நல்ல திறனும் போதுமான அனுபவமும் இருந்தால் காலத்தை வீணாக்காதீர்கள். இன்றே தொழில் தொடங்குங்கள்" என்று புதிய தொழில் முனைவர்களுக்கு திரு ரவீந்திரன் அழைப்பு விடுத்தார்.

"ஆனால் ஆரம்ப காலத்தில் முயற்சிக்கு உறுதுணையாகச் சிறந்த உழியர்கள் உடன் இருப்பது அவசியம்" என்றார் அவர்.

தொழில் தொடங்குவதற்கு முன்பு சந்தையில் பொருட்களின் தேவை எப்படி இருக்கிறது என்பதைக் கண்டறிவது முக்கியம்.

சீரான திட்டத்தை வகுத்து சரியான மனப் போக்குடன் செயல்பட்டால் வெற்றிக் கனியைப் பறித்து விடலாம் என்பது திரு ஆண்டன் ரவீந்திரனின் தளராத நம்பிக்கையாகும்.

"வாய்ப்புகளுக்காகக் காத்திருக்காதீர்கள். எப்படி வாய்ப்புகளைச் சாதகமாக உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதைக் கண்டறியுங்கள்" என்று தொழில் முனைவோருக்கு அவர் யோசனை வழங்கினார்.

திரு ஆண்டன் ரவீந்திரன், இலங்கையில் பிறந்து இந்தியாவின் பெங்களூர் நகரில் படிப்பைத் தொடர்ந்து அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் எம்பிஏ முதுநிலைப் பட்டப் படிப்பை முடித்தவர்.

கடந்த 2000ம் ஆண்டில் பிரபல சன் மைக்ரோ சிஸ்டம் நிறுவனத்தின் தெற்கு ஆசிய வட்டாரத்தின் வர்த்தக தலைவராகப் பணி ஆற்றிய திரு ரவீந்திரன் கை நிறையச் சம்பளம் பெற்று வந்தார்.

ஆனால் அந்த வேலையைக் கைவிட்டு விட்டு தைரியத்துடன் அவர் சொந்தத் தொழிலில் இறங்கினார்.

"எனது மனைவிக்கு நல்ல வேலையைக் கைவிடுகிறாரே என்ற கவலை இருந்தது. அதனால் சொந்தத் தொழில் தொடங்கும் முயற்சியை சில காலத்திற்கு ஒத்தி போட நேர்ந்தது" என்று தமிழ் முரசிடம் பேசிய திரு ஆண்டன் ரவீந்திரன் வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

தமது வர்த்தகப் படகை அவர் சரியான திசையில் செலுத்திக் கொண்டிருந்தாலும் ஒரு முறை அவரது படகு பாறையில் இடித்துத் தடுமாறியது.

ஆனால் ஆண்டன் ரவீந்திரன் உடனே சுதாரித்துக்கொண்டு புத்தாக்கத்துடன் மற்றொரு திசையில் பாதையை மாற்றி அமைத்துக் கொண்டார்.

"சொந்தத் தொழில் என்றால் இடையூறுகள் நிச்சயம் இருக்கும். அதிலிருந்து மீண்டு வரக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்றார் அவர்.

"ஜினோவேட்" நிறுவனம் தற்போது சுகாதார பராமரிப்புத் துறை, மின் வர்த்தகம், தயாரிப்புத் துறை, சம்பள பட்டுவாடா, மென்பொருள் போன்ற துறைகளில் பெயர் பதித்து வருகிறது. தகவல் தொழில் நுட்பத்தில் அது பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

இந்தியாவிலும் "ஜினோவேட்" நிறுவனத்தின் கிளைகள் பம்பாய், குஜராத் உட்பட நான்கு இடங்களில் செயல்படுகின்றன.

"விரைவில் ஐந்தாவது கிளை ஒன்று கொச்சின் நகரத்தில் திறக்கப்பட விருக்கிறது.

"நல்ல பொருட்களாக இருந்தால் மட்டும் போதாது. அவற்றைத் திறமையாக விற்கும் வித்தையையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதில் புத்தாக்கம் சிறந்த வகையில் கை கொடுக்கும்" என்கிறார் ஆண்டன் ரவீந்திரன்.

"ஜினோவேட்" நிறுவனம் ஆண்டுதோறும் 40 முதல் 50 விழுக்காடு வளர்ச்சி பெற்று வருகிறது.

இந்தியாவில் மட்டும் அதன் வளர்ச்சி 80 விழுக்காட்டைத் தொடுகிறது.

இவ்வாண்டில் "ஜினோவேட்" நிறுவனத்தின் வருமானம் 17 மில்லியனுக்கு மேல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Scanned by CamScanner